**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.700/2024 நாள்- 02.03.2026

வா.சா. 2.

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்- ராஜேஷ் | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்து மூலமாக நிரூபண வாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதைப்படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| s.No. | Date | ஆவணங்கள் | வா.சா.ஆ.எண் |
|---|---|---|---|
| 1 | 12.02.2009 | கிரைய ஒப்பந்தம் -- சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.49 |
| 2. | 17.02.2017 | என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் -- ஒப்பீட்டு நகல் | வா.சா.ஆ.50 |
| 3. | 11.03.2017 | வாரிசு சான்றிதழ் -- ஒப்பீட்டு நகல் | வா.சா.ஆ.51. |
| 4. | | எனது ஆதார் அட்டை -- ஒப்பீட்டு நகல் | வா.சா.ஆ.52 |

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

வா.சா.ஆ.1. அசல் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் முனியாண்டியும், முனியசாமியும் கையொப்பம் செய்துள்ளனர். வா.சா.ஆ.1-ல் சாட்சியாக ஆறுமுக பெருமாளும், 2 வது சாட்சியாக என் அப்பா மனோகரனும், சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். வா.சா.ஆ.49-ல் முனியாண்டியும், என் அப்பா மனோகரனும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

<u>**குறுக்கு விசாரணை**</u> -பிரதிவாதி தரப்பில்

நான் B.E., படித்துள்ளேன். நான் 2009 ம் ஆண்டு என்னுடைய பட்டப்படிப்பை முடித்தேன். நான் தற்போது இராஜபாளையத்தில் பிஸினஸ் செய்து வருகிறேன். இறந்து போன முனியாண்டி அவரது மகன்கள் 3 ,5 வாதிகளை தெரியுமா என்று கேட்டால் ஆறுமுகப் பெருமாள் மூலம் எனக்கு தெரியும். ஆறுமுகப் பெருமாள் இறந்துவிட்டார். 3, 5 வாதிகளுக்கும், எனக்கும் பழக்கம் இல்லை. ஆறுமுகப் பெருமாள் கூறி தான் முனியாண்டி மற்றும் அவரது மகன்கள் யார் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 49 ஆவணங்களுக்கான அசலை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எப்போது பார்த்தேன் என்று கேட்டால் கையொப்பம் செய்யும் போது பார்த்தேன். அதன் பிறகு தற்போது தான் பார்க்கிறேன் என்றால் அந்த ஆவணங்களின் ஜெராக்ஸ் நகலை என் அப்பா வைத்திருந்தார் அதை நான் பார்த்துள்ளேன். என் அப்பா வைத்திருந்த ஜெராக்ஸ் நகல்கள் பற்றி என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 49-ல் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 49 ல் கண்ட சொத்துக்கள் இராஜபாளையம் டவுனில் உள்ளது. வா.சா.ஆ.1, 49 ல் கண்ட தரப்பினர்கள் மற்றும் சாட்சிகள் இராஜபாளையத்தை சேர்ந்தவர்கள் தான். வா.சா.ஆ.1, 49 ஐ தயார் செய்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, 49 – ஆவணங்கள் தயார் செய்த கரிவலம் வந்த நல்லூர் கிராமம் இராஜபாளையத்திலிருந்து சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும். இராஜபாளையத்தில் பத்திர அலுவலகமும், ஆவண எழுத்தர்களும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். என் அப்பா கையெழுத்து போட்ட வேறு ஆவணங்கள் என் கைவசம் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 49- ஆவணங்களின் கண்ட முத்திரைத்தாள்கள் எந்த ஊரில் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. முனியசாமி என்பவரை என்னிடம் ஆறுமுகப் பெருமாள் தான் அடையாளம் காட்டினார். முதன்முதலில் வா.சா.ஆ.1, 49 ஆவணங்கள் எழுதிய அன்று தான் அடையாளம் காட்டினார். அந்த ஆவணத்தை தேதிக்கு பின்னர் தற்போது வரை நான் முனியசாமியை நான் பார்த்ததில்லை என்றால் கொரானாவில் இறப்பதற்கு முன்பு வரை பார்த்தேன். முனியசாமி இராஜபாளையத்தில் வசித்து வந்தார். வா.சா.ஆ.1, 49-ல் முனியசாமியின் முகவரி இராஜபாளையம் என்று தான் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1, 49 ஆவணங்கள் கரிவலம்வந்த நல்லூர் பால்வண்ண நாதர் கோவிலில் வைத்து எழுதப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளதா என்று கேட்டால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, 49 ஆவணங்களை இந்த வழக்கில் சாட்சியம் அளிக் கவரும் போது தான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 49 ஆவணங்களை பார்த்து என் தாத்தா ஆறுமுகப் பெருமாள் 1 வது சாட்சியாகவும், என் அப்பா 2 வது சாட்சியாகவும் கையொப்பம் செய்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். ஆறுமுகப் பெருமாள் மசாலா பொடி வாங்கி விற்பனை செய்ததன் மூலம் தொழில் செய்து வந்தார். ஆறுமுகப் பெருமாளின் 1 கடை ரயில்வே பீடர் ரோட்டில் காமராஜ் மண்டபத்திற்கு அருகிலும், மற்றொரு குடோன் மீனாட்சி தியேட்டர் அருகே நகராட்சி வாட்டர் டேங்க் அருகே வைத்திருந்தார். இது தவிர ஆறுமுகப் பெருமாள் வாட்டர் கேன் தொழில் மற்றும் டிராவல்ஸ் தொழில் செய்து வந்தார். வாதிகள் இராஜபாளையம் நகராட்சி பார்க்கிற்கு எதிரே எலக்ட்ரிக் கடை தொழில் சுமார் 30 வருடங்களாக வாடகை கட்டிடத்தில் நடத்தி வருகிறார்கள். அந்த கட்டிடம் முனியசாமிக்கு சொந்தமான கட்டிடம் ஆகும். அந்த கட்டிடத்தை ஒட்டி அமைந்துள்ள 2000 சதுரடியில் ஆறுமுகப் பெருமாள் மரக்கடை நடத்தி வந்தார். தற்போது அந்த இடம் காலியாக உள்ளது. யார் கைவசம் உள்ளது என்று எனக்கு தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யான விவரங்கள் என்றும் வா.சா.ஆ.1, 49 பொய்யான ஆவணங்கள் என்றும், அந்த ஆவணங்களை பற்றி நேரில் தெரியும் என்று நிரூபணவாக்குமூலத்தில் கூறியிருப்பது பொய் என்றும், வா.சா.ஆ.1, 49 ஆவணத்தில் முனியசாமி மற்றும் என் அப்பா கையொப்பம் செய்ததில்லை என்றும் வாதிகளுக்கு நான் வேண்டிய நபர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடந்து வரும் விவரம் எனக்கு 6 மாதமாக

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

தெரியும். இந்த வழக்கில் பிரதிவாதிகள் யார் என்று கேட்டால் ராஜா இனத்தை சேர்ந்தவர் என்று தெரியும் யார் என்று தெரியாது. வா.சா.ஆ.1-பற்றி பிரதிவாதிகள் என்ன வழக்கு நடத்தி வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கடந்த 8 மாதங்களுக்கு முன்பாக வாதிகள் என் அப்பாவை தேடி வந்தார்கள் என் அப்பா இறந்துவிட்டார் என்று கூறியதால் என்னை சாட்சியம் அளிக்க கூறினார்கள். என்னை சாட்சியம் அளிக்க வாதிகள் ஆவணங்களை காட்டினார்களா என்று கேட்டால் இல்லை. என் அப்பா கைவசம் வைத்துள்ள ஜெராக்ஸ் நகலில் என் அப்பா எவ்வித குறிப்பும் எழுதவில்லை. என் அப்பா 2016 ல் இறந்துவிட்டார். என் அப்பா வைத்துள்ள ஜெராக்ஸ் நகல் என் அப்பா கைவசம் வந்ததிலிருந்து எனக்கு தெரியும்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.